(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## இரண்டாம் தவணை பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 2nd Term Examination - 2022

| | | |
|---|---|---|
| வணிகக்கல்வி - I<br>Business Studies - I | Three Hours<br>Gr. 12 (2023) | 32 T I |

சுட்டெண் :...............................

**அறிவுறுத்தல்கள் :-**
- எல்லா வினாக்களுக்கும் இத்தாழிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

01. உற்பத்தியின் மூலம் நுகர்வோரது.
 1) தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.
 2) விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படும்.
 3) தேவைகளும், விருப்பங்களும் நிறைவு செய்யப்படும்.
 4) தேவையைப் பூர்த்தி செய்ய வளங்கள் பயன்படுத்தப்படும்
 5) நுகர்வோரின் வருமானம் அதிகரிப்பதன் மூலம் வாழ்க்கைத் தரம் உயர்வடையும். (…….)

02. வணிகங்களின் பண்புகளும், வணிகக் கருமங்களும் கீழே தரப்பட்டுள்ளன.
 A. தேவைகள், விருப்பங்களை நிறைவு செய்தல்
 B. இலாபத்தினால் ஊக்குவிக்கப்படல்
 C. இடரொன்று காணப்படல்
 D. வளங்களுக்குப் பெறுமதி சேர்த்தல்
 E. பொருளாதார நடவடிக்கையொன்றாக இருத்தல்
 இவற்றுள் வணிகங்களின் பண்புகளை மட்டும் உள்ளடக்கியது
 1) A,B,C 2) B,C,E 3) B,G,E 4) A,D,E 5) B,C,D (…….)

03. வணிக வளர்ச்சி ஆரம்பமாவதற்கு முதலாவது சந்தர்ப்பமாக அமைந்தது
 1) தனியாள் சிறப்புத்தேர்ச்சி 2) கைத்தொழில் புரட்சி 3) பண்டமாற்று
 4) நேர் உற்பத்தி 5) பணப்பாவனை (…….)

04. பின்வரும் அட்டவணையில் X,Y ஆகிய நிரல்களில் முறையே உற்பத்தித் துறைகளும் அவற்றின் துணைப்பிரிவுகளும் காட்டப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A. விவசாய உற்பத்தி<br>B. கைத்தொழில் உற்பத்தி<br>C. சேவை உற்பத்தி | 1. கால்நடை உற்பத்தி<br>2. காட்டு வளத்தொழில்<br>3. கழிவகற்றல் முகாமைத்துவம்<br>4. தகவல் மற்றும் தொடர்பாடல்<br>5. நீர் சுத்திகரிப்பும் விநியோகமும்<br>6. வீட்டு உரிமை மற்றும் ஆதன வியாபாரம். |

 X நிரலில் காட்டப்பட்டுள்ள உற்பத்தித் துறைகளுக்கு பொருத்தமான Y நிரலிலுள்ள துணைப் பிரிவுகளை சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
 1) A - 1,3 B - 2,5 C - 4,6
 2) A – 1,3 B – 2,4 C - 5,6
 3) A - 1,2 B – 3,5 C – 4,6
 4) A – 1,4 B – 2,3 C – 5,6
 5) A – 1,3 B – 2,6 C – 4,5 (…….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

05. எந்தவொரு வணிகத்திற்கும் பொதுவான செயன்முறையொன்று உண்டு இவ்வணிகச் செயன்முறையின் போது உள்ளீடு வெளியீடாக மாற்றப்படும். பின்வருவனவற்றுள் உள்ளீட்டினை வெளியீடாக மாற்றும் இடைச்செயன்முறையாக கருதப்படுவது எது?
1) உள்ளீடு ⟶ உற்பத்தி ⟶ வெளியீடு
2) உள்ளீடு ⟶ மாற்றுச் செயன்முறை ⟶ வெளியீடு
3) உள்ளீடு ⟶ வணிகக் கருமங்கள் ⟶ வெளியீடு
4) உள்ளீடு ⟶ முகாமைத்துவச் செயன்முறை ⟶ வெளியீடு
5) உள்ளீடு ⟶ வணிகச் செயன்முறை ⟶ வெளியீடு (…….)

06. வணிகத்தில் செல்வாக்குச் செலுத்தும் பிரிவினர், அப்பிரிவினர் உள்ளடங்கும் சூழல் மற்றும் அவர்கள் வணிகம் தொடர்பில் அக்கறை காட்டுவதற்கான காரணம் என்பவற்றை முறையாக காட்டும் விடைத்தொகுதியாக அமைவது.

| பிரிவினர் | வணிகச்சூழல் | அக்கறை காட்டுவதற்கான காரணங்கள் |
|---|---|---|
| 1. உரிமையாளர் | அ. அண்மிய சூழல் | A. தரமான பொருள்களும் சேவைகளும் |
| 2. வாடிக்கையாளர் | ஆ. பேரினச் சூழல் | B. வணிக விருத்தி |
| 3. அரசு | இ. அகச் சூழல் | C. வரி மற்றும் சட்டதிட்டங்களை விதித்தல் |

1) 1, இ, B / 2, அ, A / 3, ஆ, C
2) 1, ஆ, A / 2, இ, C / 3, அ, B
3) 1, அ, C / 2, அ, A / 3, இ, B
4) 1, அ, A / 2, இ, B / 3, ஆ, C
5) 1, இ, B / 2, அ, C / 3 ஆ, C (…….)

07. வணிகமொன்றின் மூலம் நிறைவேற்றப்படும் சமூகப் பொறுப்புக்கள் சில வருமாறு.
A. சமத்துவத் தன்மை B. பசுமை உற்பத்தி C. சுகாதார வசதிகள்
D. தொழில் பாதுகாப்பு E. வேலை வாய்ப்பு F. வினைத்திறனான முகாமைத்துவம்
இவற்றுன் ஊழியர் சார்ந்த சமூகப் பொறுப்புக்களை மட்டும் உள்ளடக்கிய விடையாக அமைவது?
1) A,C,E 2) A,B,C 3) C,E,F 4) A,C,D 5) A,C,F (…….)

08. எதிர்காலச் சந்ததியினருக்காக வளங்களை மீதப்படுத்தி சேமித்து பூகோளமயச் சூழலைப் பாதுகாத்தல் தொடர்பாக செயற்பாடுகளினால் எதிர்பார்க்கப்படுவது.
1) நிலைபேறான அபிவிருத்தி
2) பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி
3) சமூக நிலைபேறான அபிவிருத்தி
4) மனித நிலைபேறான அபிவிருத்தி
5) சூழல் நிலைபேறான பாதுகாப்பு (…….)

09. பொருளாதார உறுதிப்பாடானது அகப், புற விலைமட்ட உறுதித்தன்மை என இரு பிரிவுகளாகக் காணப்படும். இவற்றுள் அகவிலை மட்ட உறுதித் தன்மை என்பதனால் கருதப்படுவது யாது?
1) விலை மட்டத்தை நிலையான மட்டத்தில் பேணுதல்.
2) பணவீக்கத்தை நிலையான மட்டத்தில் பேணுதல்.
3) வட்டி வீதத்தை நிலையான மட்டத்தில் பேணுதல்.
4) செலாவாணி வீதத்தை நிலையான மட்டத்தில் பேனுதல்
5) அரசின் வரிக்கொள்கையை நிலையான மடடத்தில் பேணுதல் (…….)

10. நிலைபேறான அபிவிருத்தியின் இலக்குகள் எத்தனை?
(1) 3 (2) 5 (3) 10 (4) 12 (5) 17 (…….)

11. பின்வருவனவற்றுள் எது நுகர்வோன் பொறுப்பாக கருதப்படும்?
1) தகவல் அறிந்து கொள்ளல்
2) இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளல்
3) பொருள்களைத் தெரிவு செய்தல்
4) அறிவைப் பெற்றுக்கொள்ளல்
5) தன்னைத்தானே பாதுகாத்தல் (…….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

12. ஓர் உற்பத்திப்பொருள் மீதான SLS குறியீடு எதனைக் குறித்து நிற்கின்றது.
   1) உற்பத்திப் பொளின் தரம்
   2) உற்பத்திப் பொருளின் விலை
   3) உற்பத்திப் பொருள் குறித்த நியமமொன்றுக்கு அமைவானது
   4) உற்பத்திப் பொருள் தொடர்பாக நுகர்வோர் அபிப்பிராயம்
   5) உற்பத்திப் பொருள் தொழில்நுட்ப ஆய்வுக்குட்பட்டது. (…….)

13. நிரல் ‘அ’ வில் வணிக அமைப்புக்களும் நிரல் ‘ஆ’ வில் அவற்றுக்கான உதாரணங்களும் தரப்பட்டுள்ளன.

| அ | ஆ |
|---|---|
| 1. அரச கூட்டுத்தாபனம் | A. ஸ்ரீலங்கன் விமான சேவைகள் கம்பனி |
| 2. அரச திணைக்களம் | B. கல்வித்திணைக்களம் |
| 3. அரச கம்பனிகள் | C. இலங்கை பொசுபேற்றுக் கம்பனி |
| | D. பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு |
| | E. இலங்கை துறைமுக அதிகாரசபை |
| | F. சுகாதாரத் திணைக்களம் |
| | G. இலங்கை மின்சாரசபை |

(அ) (ஆ) இனை இணைக்கும் போது சரியான விடையைக் காட்டும் தொகுதியாக அமைவது.
1) 1-DEG, 2-BF, 3-AC    2) 1-EB, 2-ADG, 3-FC    3) 1-AB, 2-FA, 3-CDF
4) 1-AB, 2-DC, 3-EFG    5) 1-BDF, 2-AC, 3-EF    (……..)

14. பசுமை முயற்சியாளரின் பிரதான நோக்கம்
   1) வாழ்க்கை நிலையை உயர்த்துவதாகும்.
   2) சந்தையை விரிவாக்குதல்
   3) புதிய பொருள், சேவைகளை அறிமுகப்படுத்தல்
   4) வீண்விரயமாகும் வளங்களைப் பயன்பாட்டிற்குட்படுத்தல்
   5) இயற்கைச் சூழல் மீது நேரான வகையில் தாக்கங்களை ஏற்படுத்துவதாகும்.

15. பின்வருவன பணத்தின் சில பண்புகளும், தொழிற்பாடுகளும் ஆகும்.
   A. பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுதல்
   B. பரிமாற்றூடமாகத் தொழிற்படல்
   C. போலிகளை உருவாக்குவது கடினமாகவிருத்தல்
   D. பெறுமான திரட்டாகக் கருமாற்றுதல்
   E. இலகுவாக கொண்டு செல்லக் கூடியதாயிருத்தல்
   F. சிறிய அலகுகளாகப் பிரிக்க கூடியாதாகவிருத்தல்
   G. பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகமாகத் தொழிற்படல்.
   மேலே தரப்பட்டவற்றுள் பணத்தின் பண்புகள் இனங்காட்டும் எழுத்துக்களாக அமைவது.
   1) A, B, C, D    2) B, C, F,G    3) A, C, E, F    4) B, C, F, G    5) A, C, E, F    (……..)

- **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்ட வெற்றிடங்களை நிரப்புக.**

16. அ) நேர் உற்பத்தியினுடாக ………………………………. உருவானதுடன் ………………. காரணமாக வியாபாரம் தோற்றம் பெற்றது.

   ஆ) …………………… மற்றும் …………………….. என்பவற்றின் சேர்க்கை வர்த்தகம் ஆகும்.

17. அ) வணிக நிறுவனங்கள் இலாபத்தைப் பெறுவதற்காக எதிர்நோக்கும் ……………………………… தன்மை, …………………… என அழைக்கப்படும்.

   ஆ) 18 ஆம் நூற்றாண்டளவில் ஏற்பட்ட ………………..…………… காரணமாக …………………. வளர்ச்சியடைந்தது எனக் கூற முடியும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

18. அ) வணிகத்தினால் கட்டுப்படுத்தக் கூடிய சூழல் …………………………………… எனவும், வணிகமொன்றின் கிரயங்களின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் சூழல் ……………………… எனவும் கருதப்படும்.

ஆ) …………………………… போதும் ……………………… போதும் நாளாந்தம் பெருமளவு கழிவுப் பொருட்கள் சேருதல் பூகோள ரீதியான பிரச்சனையொன்றாக இன்று உள்ளது.

19. அ) இலங்கையிலுள்ள வணிகங்களின் அரசின் தலையீடானது மத்திய அரசு மற்றும் ……………………., ……………………. என்பவற்றினூடாக இடம் பெறுகின்றது.

ஆ) நாட்டின் மொத்த உற்பத்தியானது அந்நாட்டில் வாழும் மொத்த சனத்தொகையினருக்கிடையே சமமாக பகிரப்பட்டுள்ள முறையைக் குறிப்பது ………………………………………… எனப்படுவதோடு, பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தில் …………………………. நிலைப்புத்தன்மை பேணப்படுகிறது.

20. அ) பங்கு மூலதனமின்றி ஆரம்பிக்கப்படும் ஒரு கம்பனி ……………………………………… என அழைக்கப்படுவதுடன் பொது மக்களுக்கு பங்குகளை மற்றும் பிணைப்பத்திரங்களை விற்பனை செய்ய தடை செய்யப்பட்டுள்ள ஒரு கம்பனி …………………………………… என அழைக்கப்படும்.

ஆ) வரையறுத்த கம்பனி ஒன்றில் சட்ட ஆளுமையானது கம்பனி சட்டத்தின் மூலமும் ……………………………... உருவானதாகும்.

❖ **21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

21. வணிகப் பரம்பலின் முக்கிய சந்தர்ப்பங்கள் நான்கினையும் ஒழுங்கு வரிசைப்படி குறிப்பிடுக.
i. ……………………………………………………………………………………………
ii. ……………………………………………………………………………………………
iii. ……………………………………………………………………………………………
iv. ……………………………………………………………………………………………

22. வழங்குனர்கள் நிறுவனம் ஒன்றுக்கு வாய்ப்பாக அமையும் சந்தர்ப்பங்கள் நான்கு தருக.
i. ……………………………………………………………………………………………
ii. ……………………………………………………………………………………………
iii. ……………………………………………………………………………………………
iv. ……………………………………………………………………………………………

23. அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்தும் முறைகள் நான்கு தருக.
i. ……………………………………………………………………………………………
ii. ……………………………………………………………………………………………
iii. ……………………………………………………………………………………………
iv. ……………………………………………………………………………………………

24. சர்வதேச நுகர்வோர்கள் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகளைக் குறிப்பிடுக.
i. ……………………………………………………………………………………………
ii. ……………………………………………………………………………………………
iii. ……………………………………………………………………………………………
iv. ……………………………………………………………………………………………

25. உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் பண்புகள் 4 தருக.
(i) ……………………………………………………………………………………………
(ii) ……………………………………………………………………………………………
(iii) ……………………………………………………………………………………………
(iv) ……………………………………………………………………………………………

(25x2 = 50 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# இரண்டாம் தவணை பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 2nd Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| வணிகக்கல்வி - II<br>Business Studies - II | Three Hours<br>Gr. 12 (2023) | 32 | T | II |

❖ **அறிவுறுத்தல்கள்**

ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி - I

01) i) வணிகம், வர்த்தகம் ஆகிய எண்ணக்கருக்களுக்களுக்கிடையிலான தொடர்பினை விளக்குக.

ii) தேவைகள், விருப்பங்கள் என்பதனை உதாரணத்துடன் விபரிக்குக.

ii) வணிகமொன்றின் பிரதான கருமங்களுள் “வளங்களுக்கு பெறுமதி சேர்த்தல்” என்பதும் ஒன்றாகும். விளக்குக.

iv) பொருளாதார வாழ் தன்மைக்கு வணிகமொன்று பங்களிப்புச் செய்கின்ற நான்கு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

v) பண்டமாற்று முறை தொடக்கம் இன்று வரை பணப் பயன்பாட்டில் ஏற்பட்ட பரம்பல் படிமுறையினை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

02) i) இலத்திரனியல் வர்த்தகம், இலத்திரனியல் வணிகம் என்பவற்றுக்கான தொடர்பினைக் குறிப்பிடுக.

ii) வணிகமொன்றின் அடிப்படைத் தொழிற்பாடுகள் நான்கைக் குறிப்பிடுக.

iii) நேர் உற்பத்தி, நேரில் உற்பத்தி இற்கும் இடையிலான வேறுபாட்டை உதாரணம் குறிப்பிட்டு விளக்குக.

iv) பொருள்களுக்கு சேவைகளுக்கும் இடையே காணப்படும் நான்கு வேறுபாடுகள் தருக.

v) “வர்த்தகம் என்பது வியாபாரத்திலும் கூடுதலான ஒன்றாகும் ஆயினும் வியாபாரம் இன்றி வர்த்தகம் இடம்பெற முடியாது” விளக்குக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

03) i) அண்மிய சூழல் காரணிகள் நான்கு குறிப்பிடுக.

ii) வணிகமொன்றின் மீது அக்கறை காட்டும் தரப்பினர் இருவரைக் குறிப்பிட்டு அவர்கள் வணிகம் மீது அக்கறை காட்டுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

iii) பேரினச் சூழல் காரணிகளினால் அண்மிய சூழல் காரணிகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதினூடாக வணிகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் இரண்டினை உதாரணம் மூலம் விளக்குக.

iv) வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும், சமூகத்திற்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் காரணிகள் நான்கு குறிப்பிடுக.

v) சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதனூடாக வணிகமொன்று பெற்றுக் கொள்ளக்கூடிய நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(5x2 = 10 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி – II

04) i) நிலைபேறான அபிவிருத்தி என்பதன் கருத்து யாது?

ii) சூழலின் நிலைபேறான தன்மையை அடைந்து கொள்வதற்காக வணிகங்கள் விசேடமாக கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கு குறிப்பிடுக.

iii) கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின் எண்ணக்கரு நான்கினையும் குறிப்பிடுக.

iv) பாடசாலையில் உம்மால் (மாணவர்கள்) பின்பற்றப்படும் ஒழுக்க விழுமிய பண்புகள் நான்கை குறிப்பிடுக.

v) சமூகப் பொறுப்பு தொடர்பில் ''பிலிப்பைன்ஸ்'' நாட்டின் முன்மொழியப்பட்ட வரைவிலக்கணம் யாது?

(5x2 = 10 புள்ளிகள்)

05) i) தற்காலத்தில் நுகர்வோர் பாதுகாப்பு முக்கியத்துவம் பெறுவதில் செலவாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கு குறிப்பிடுக.

ii) இலங்கை தர நிர்ணய நிறுவனம் வெளிநாட்டு வியாபாரம் தொடர்பில் தர நியமங்களை நடைமுறைப்படுத்தும் முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

iii) அரசின் பொருளாதார நோக்கங்கள் நான்கு குறிப்பிடுக.

iv) அளவு ரீதியான கடன் கட்டுப்பாட்டிற்கு இரு உதாரணம் தருக.

v) இலங்கை அரசானது கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக நாடாத்துவதற்கு மாணவர்களுக்கு பின்வரும் வசதிகளை வழங்குகின்றது.

அ) சீருடைகள்

ஆ) பாடப்புத்தகங்கள்

இ) பாடசாலைக் கட்டடங்கள்

ஈ) கழிவுப் பொருள் அகற்றல்

மேற்குறிப்பிட்ட வசதிகளை அரசானது எவ்வெவ் மட்டங்களில் இருந்து செயற்படுத்தப்படுகின்றது என்பதைக் குறிப்பிடுக.

(5x 2 = 10 புள்ளிகள்)

06) i) முயற்சியாளரிடம் காணப்பட வேண்டிய திறன்கள் தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன. கூற்றுகளுக்கு பொருத்தமான முயற்சியாண்மைத் திறன்களை இடைவெளியில் குறிப்பிடுக.

A. உள்ளக, வெளியக பிரிவினர்களுடன் சிறந்த இடைத்தொடர்புகளைப் பேணல்.

B. நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள சிறந்த தொடர்பொன்றினைப் பேணல்.

C. திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல், நெறிப்படுத்தல் போன்ற திறன்களைக் கொண்டிருத்தல்.

D. தனக்கு கீழ் பணிபுரிவோர்களைக் கொண்டு கருமங்களை நிறைவேற்றிக் கொள்ள ஊழியர்களை நெறிப்படுத்தல், ஊக்கப்படுத்தலை மேற்கொள்ளல்.

ii) நீர் ஒரு சிறிய பலசரக்கு வியாபாரம் ஒன்றினை நடாத்த தீர்மானித்துள்ளீர் எனக் கருதி கொண்டு ஆரம்பிக்கும் போதும், நடாத்திச் செல்லும் போதும் கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

iii) இலங்கையிலுள்ள நிதி நிறுவனங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

1. இலங்கை மத்திய வங்கி
2. ஊழியர் நம்பிக்கை நிதியம்
3. முயற்சியாண்மை மூலதனக் கல்வி
4. கூட்டுறவு கிராமிய வங்கி

மேலே குறிப்பிட்ட நிறுவனங்களை கீழே குறிப்பிடும் தலைப்பிற்கு ஏற்ப வகைப்படுத்திக் காட்டுக.

A. வங்கித்துறை

B. வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்

C. விசேட நிதி நிறுவனங்கள்

D. ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள்

iv) சட்டப்பணத்தினால் நிறைவேற்றப்படும் எல்லாத் தொழிற்பாடுகளும் அண்மிய பணத்தினால் நிறைவேற்றப்படுவதில்லை இக்கூற்றினை விளக்குக.

v) உரிமம் பெற்ற வணிக வங்கியொன்றை உரிமம் பெற்ற விசேட வங்கியிலிருந்து வேறுபடுத்துகின்ற இரண்டு கருமங்களைத் தருக.

(5 x 2 = 10 புள்ளிகள்)